# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை அலுவலகத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) <u>நிருவாக அலுவலர் வகுப்பு II (வெற்றிடம் 01)</u>**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்** (கீழுள்ள பந்தி அ அல்லது ஆ)

அ. நிருவாகம் மற்றும் மனித வளங்கள் முகாமை துறையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம்.

ஆ. நிருவாகம் மற்றும் மனித வளங்கள் முகாமை விடயத் துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றுறை பட்டய நிறுனத்தின் இடைக்காலப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்** (கீழுள்ள பந்தி அ அல்லது ஆ)

அ. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக மேலே உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வேண்டப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

ஆ. பதவியுடன் தொடர்புடைய துறையில் 'முகாமை உதவியாளர் - தொழிநுட்பவியல் சாராதது' (MA 1-2) வகுப்பு II இல் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**: 22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

சம்பள அளவுத்திட்டம்: ரூ.42,600/- - 10x755 – 18x1,135 - ரூ.70,580/-

(சொல்லப்பட்ட சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

பொது நிபந்தனைகள்

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இந்தப் பதவி நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாகும். இடமாற்றம் இல்லை.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும்படி வேண்டப்படலாம்.

(ஈ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி மருத்துவ மற்றும் விபத்துக் காப்புறுதி திட்டத்துக்கு உரித்துடையவராவார்.

(ஊ) **சான்றிதழ்கள்**: மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

முழுமையான சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தில் உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள், முகவரிகள், தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட்டு கீழே குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு 2014.07.15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் முலையில் குறிப்பிடவும்.

மார்ஷல்,

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

த.பெ.இல:223,

கொழும்பு 12.